www.Padasalai.Net www.CBSEtips.in

பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

THEN CHITTU ★ FORTNIGHTLY ★

# தேன்சிட்டு

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9 வகுப்புகளுக்கான மாதமிருமுறை இதழ்
01-15 ஜூலை 2023
சிட்டு 2 ★ இதழ் 15
விலை : ரூ. 10/-
சென்னை

01-15 JULY 2023
Chittu 2 ★ Issue 15
Price : Rs. 10/-
Chennai

# இது யானை அல்ல!

https://kalvi-thagavalkalanjiyam.blogspot.com

தினமும் மதியம் 1 மணிமுதல் 1.20 மணிவரை வாசிப்பு நேரம்



வியப்பாக உள்ளதா? மேலும் அறிய, 16ஆம் பக்கம் வாங்க!



05 ரிமோட் கண்ட்ரோல்



18 ரோபோக்களோடு பேசும் சரண்யா



22 வலிமை தரும் வாழைப்பழம் →

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





அனைத்துப் பள்ளிகளிலும்

# உடற்திறனறித் தேர்வு

(பேட்டரி டெஸ்ட்)

உடற்திறனைக் கண்டறிந்து விருப்பமான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறுங்கள்

## அரசுப் பள்ளிகளில் கற்றுத் தரப்படும் விளையாட்டுகள்

### ஏற்கெனவே உள்ள விளையாட்டுகள்

| விளையாட்டுகள் | வீரர்களின் எண்ணிக்கை | வயது வரம்பு |
|---|---|---|
| கால் பந்து | 18 | U 14, U 17, U 19 |
| ஹாக்கி | 18 | U 14, U 17, U 19 |
| கூடைப் பந்து | 12 | U 14, U 17, U 19 |
| கைப் பந்து | 12 | U 14, U 17, U 19 |
| கோ – கோ | 12 | U 14, U 17, U 19 |
| கபடி | 12 | U 14, U 17, U 19 |
| எறி பந்து | 14 | U 14, U 17, U 19 |
| ஹாண்ட் பால் | 16 | U 14, U 17, U 19 |
| பால் பேட்மின்ட்டன் | 10 | U 14, U 17, U 19 |
| டென்னிஸ் (S) | 1 | U 14, U 17, U 19 |
| டென்னிஸ் (D) | 2 | U 14, U 17, U 19 |
| பேட்மின்ட்டன்(S) | 1 | U 14, U 17, U 19 |
| பேட்மின்ட்டன்(D) | 2 | U 14, U 17, U 19 |
| டேபிள் டென்னிஸ்(S) | 1 | U 14, U 17, U 19 |
| டேபிள் டென்னிஸ்(D) | 2 | U 14, U 17, U 19 |
| சதுரங்கம் | 1 | U 11, U 14, U 17, U 19 |

### புதிய விளையாட்டுகள்

| விளையாட்டுகள் | | வீரர்களின் எண்ணிக்கை | வயது வரம்பு |
|---|---|---|---|
| குத்துச்சண்டை | | 13 | U 14, U 17, U 19 |
| ஜூடோ | | 10 | U 14, U 17, U 19 |
| சிலம்பம் | | 9 | U 14, U 17, U 19 |
| டேக்வோண்டோ | | 13 | U 14, U 17, U 19 |
| ரோட் சைக்கிளிங் | | 2 | U 14, U 17, U 19 |
| பீச் வாலிபால் | | 2 | U 14, U 17, U 19 |
| பென்சிங் | | 12 | U 14, U 17, U 19 |
| ஜிம்னாஸ்டிக்ஸ் | | 7 | U 14, U 17, U 19 |
| நீச்சல் | | 32 | U 14, U 17, U 19 |
| கேரம் | (S) | 1 | U 14, U 17, U 19 |
| | (D) | 2 | U 14, U 17, U 19 |
| ஸ்குவாஷ் | (S) | 1 | U 14, U 17, U 19 |
| | (D) | 2 | U 14, U 17, U 19 |
| டென்னிகோய்ட் | (S) | 1 | U 14, U 17, U 19 |
| | (D) | 2 | U 14, U 17, U 19 |

* S - Single
* D - Doubles
* U - Under

# மாணவர்களே...

பள்ளித் தலைமை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியரை அணுகுங்கள்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!**

# ரயிலே வா வா!

ரயிலே வா வா, ரயிலே வா வா
ரயிலே ரயிலே வா!
கடகட குடுகுடு, கடகட குடுகுடு
ரயிலே ரயிலே வா!

கூகூ வென்றே கூய்கூய் என்றே
கூவி முழங்கியே வா!
வேகம் இன்னும் மிகவே மின்னல்
வேகம் தோற்றிட வா!

படரும் கொடிபோல் வளைந்து வளைந்து
பாயும் ரயிலே வா!
பாம்பின் உடல்போல் நெளிந்து நெளிந்து
பறக்கும் ரயிலே வா!

கொளுத்தும் வெயிலைச் சகித்துக்கொண்டு
உலகம் சுற்றுகிறாய்
கொட்டும் மழையைச் சட்டை செய்யாமல்
கூவிச் செல்லுகிறாய்!


ஊர் ஊராகப் போகும் ரயிலே
உனக்கும் அலுக்காதோ?
ஓயாது ஒழியாது ஓடும் உந்தன்
உடலும் வலிக்காதோ?

ஆயிரம் ஆயிரம் மக்களை ஏற்றி
அயராது எங்கனுமே,
போயிடும் உன்னைப் பொறுமைக் கடல் எனப்
போற்றிடுவேன் ரயிலே!

ரயிலே வா வா, ரயிலே வா வா
ரயிலே ரயிலே வா!
கடகட குடுகுடு கடகட குடுகுடு
ரயிலே ரயிலே வா!

– கிருஷ்ணன் நம்பி





## உள்ளே...



04 யானையும் எறும்புகளும்

பாபுவும் சிட்டுக்குருவியும் 08


பாட்டு ஒப்பித்தால் பலகாரம் 21




தேன்சிட்டு
Then Chittu Fortnightly
- 01 - 15 ஜூலை 2023
- சிட்டு 2 இதழ் 15
- 01 - 15 July 2023
- Chittu 2 Issue 15

***
பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி
***
அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்
***

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
69-71/A,
சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு – 600 124.
***

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்.
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006
***
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# யானையும் எறும்புகளும்!



**குண்டுமணி எனும் பெயருடைய ஒரு யானை இருந்தது.**

அது ஒரு நாள் தண்ணீர் குடிப்பதற்காக, காட்டில் உள்ள குளத்துக்குச் சென்றது. தண்ணீரை நோக்கிக் குனிந்தபோது, தன் உருவம் நீரில் பிரதிபலிப்பதைப் பார்த்தது. நீண்ட தந்தங்கள்! அகன்ற நெற்றி! பெரிய காதுகள்!

குண்டுமணிக்குத் தன்னைப் பற்றிப் பெருமை ஏற்பட்டது.

"இந்தக் காட்டிலேயே நான்தான் பெரிய விலங்கு. நான்தான் மிகவும் பலம் வாய்ந்தவன்..." என்று பிளிறியது குண்டுமணி.

வழியில் ஒரு மரக் கிளையில் வால்பையன் எனும் குரங்கு அமர்ந்திருந்தது. அதைப் பார்த்துச் சொன்னது குண்டுமணி,

"அடேய், வால்பையா, இன்று முதல் இந்தக் காட்டுக்கு நான்தான் ராஜா!"

வால்பையன் குழப்பமாகப் பார்த்தது.

முன்னோக்கி நடந்தது குண்டுமணி.

"நான்தான் இந்தக் காட்டுக்கு ராஜா. என்னை வழி மறித்து நீங்கள் குறுக்கே செல்கிறீர்களா? சீக்கிரம் விலகுங்கள்!" என்று குண்டுமணி கட்டளையிட்டது.

"அண்ணே, கொஞ்சம் பொறுங்கள். நாங்கள் இந்த அரிசி மணிகளை அந்தப் பக்கம் கொண்டு சென்று விடுகிறோம். அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்."

"அற்பப் பிராணிகள் என்று எங்களைக் கேலி செய்ய வேண்டாம். சில நேரங்களில் உங்களைவிட அதிகமான சக்தியும் திறமையும் எங்களுக்கு ஏற்படும்" என்றன எறும்புகள்.

"இல்லை, ஒருபோதும் அப்படி நடக்காது!"

"அப்படியென்றால் பந்தயம் வைத்துக்கொள்வோம். பழைய காலத்தில் ஆமையும் முயலும் செய்ததுபோல ஒரு ஓட்டப் பந்தயம் நடத்துவோம்!"

குண்டுமணி சம்மதித்தது.

காட்டு விலங்குகள் எல்லாம் ஓட்டப் பந்தயத்தைக் காண வந்தன.

பந்தயம் தொடங்கியது.

விரைவாக ஓடத் தொடங்கியது குண்டுமணி. எறும்புகளும் ஓடத் தொடங்கின.

குண்டுமணி சற்று தூரம் ஓடியது. மூச்சு விடுவதற்காகக் கொஞ்சம் நேரம் நின்றது. எறும்புகள் ஓடி வந்து தன்னை முந்த முடியாது என்று நம்பியது அது.

களைப்பு நீங்கி குண்டுமணி முன்னால் பார்த்தபோது, அதோ எறும்புக் கூட்டம் ஓடுகிறது.

"ஓகோ! நீங்கள் எனக்கு முன்னால் சென்றுவிட்டீர்களா?" என்று சொன்னபடி குண்டுமணி மீண்டும் ஓடத் தொடங்கியது.

சற்று தூரம் சென்றதும் மீண்டும் நின்றது; இளைப்பாறியது; மீண்டும் ஓடியது.

அதோ, குண்டுமணிக்கு முன்னால் சென்றுகொண்டிருக்கிறது எறும்புகளின் மிக நீளமான வரிசை!

அதிர்ச்சியடைந்தது குண்டுமணி. அற்ப எறும்புகளிடம் தான் தோற்றுப் போவதா?

குண்டுமணியால் அப்படி நினைத்தே பார்க்க முடியவில்லை. அது முழு சக்தியுடன் மீண்டும் ஓடியது. ஓடி ஓடி தடுமாறி ஒரு குழியில் சென்று விழுந்தது! அதன் கால் உடைந்தது.

அதோ, குழிக்கு மேலே நின்று எறும்புகள் எல்லாம் கை தட்டிச் சிரிக்கின்றன!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



https://kalvi-thagavalkalanjiyam.blogspot.com

# ரிமோட் கண்ட்ரோல்




**ரிமோட் கண்ட்ரோலைப் (Remote control – தொலை இயக்கி) பயன்படுத்தி தொலைக்காட்சிப் பெட்டியை இயக்க முடிவது எப்படி?**

அல்ட்ராசோனிக் அலைகள் (Ultrasonic waves – மீயொலி அலைகள்), இன்ஃப்ராரெட் சிக்னல்கள் (Infrared Signal – அகச்சிவப்பு சமிக்ஞை) ஆகியவற்றைப் பயன்படுத்தித்தான், தொலைக்காட்சிப் பெட்டிகளின் ரிமோட் கண்ட்ரோல் ஸ்விட்சுகள் செயல்படுகின்றன. தொடங்குவது (On), நிறுத்துவது (Off), ஓசையைக் கட்டுப்படுத்துவது, ஒளியளவைக் கட்டுப்படுத்துவது என்று பலவித சிக்னல்களை வெளியிடுவதற்கான அமைப்பு ரிமோட் கண்ட்ரோல் கருவியில் இருக்கிறது.

ஏறத்தாழ 30° கோணத்திற்குள் வரும்படிதான் இந்த சிக்னல்கள் வெளியிடப்படுகின்றன. ரிமோட் கண்ட்ரோல் ஸ்விட்சுகள் வெளியிடும் சிக்னல்களை, தொலைக்காட்சிப் பெட்டியின் உள்ளே இருக்கும் ஒரு சிறிய ரிசீவர் (Receiver - வாங்கி) கிரகிக்கிறது. ரிசீவர் கிரகிக்கும் சிக்னல்களுக்கு ஏற்ற வகையில் கருவியின் உள்ளே பொருத்தப்பட்டிருக்கும் I.C. (Integrated Circuit) செயல்படுகின்றன. இந்த I.C. களின் முறைப்படுத்தல் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தூரத்திலிருந்து இயக்குவதைச் சாத்தியமாக்குகின்றன.

ரிமோட் கண்ட்ரோல் ஸ்விட்சுகள் வெளியிடும் சிக்னல்களின் பாதையில் ஏதாவது தடைகள் இருந்தால், இந்த அமைப்பு செயல்படாது. சிக்னல்கள் தொலைக்காட்சிப் பெட்டியை எட்டாத அளவு ஸ்விட்சைப் பிடித்தாலும் பயன் இருக்காது. தொலைக்காட்சிப் பெட்டியில் இருந்து நீண்ட தூரத்தில் ரிமோட் கண்ட்ரோல் ஸ்விட்ச் இருக்கிறது என்றால், சிக்னல்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்குள் உள்ள ரிசீவரைச் சென்றடையும் முன்பே செயலிழந்துவிடும். ஏறத்தாழ 10 மீட்டருக்குள் இவை நன்றாகத் தொலைக்காட்சிப் பெட்டியைக் கட்டுப்படுத்தும்.

தொலைக்காட்சிப் பெட்டியின் திரைக்கு மிகப் பக்கத்திலிருந்து கட்டுப்படுத்துவதைவிட, சற்று தூரத்திலிருந்து ரிமோட் கண்ட்ரோலில் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்குவது அதிகத் துல்லியமாக இருக்கும்.

– அசுதன்

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்
மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?
பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

14417

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# ஒரு ஊரிலா... ஓர் ஊரிலா?

"ஒரு ஊர்ல ஒரு ராஜாவாம்...." இப்படித்தான் நாம் கதைகளைச் சொல்லத் தொடங்குவோம். புத்தகத்தில் வரும்போது ஓர் ஊரில் என்று இருக்கிறது. அப்படியென்றால் எது சரி என்ற குழப்பம் பலருக்கும் இருக்கும்.

பேச்சு வழக்கில் 'ஒரு ஊர்ல' என்று சொல்லியிருக்கலாம். எழுதும்போது 'ஓர் ஊரில்' என்பதே சரியானது. ஓர், ஒரு ஆகியவற்றை எங்கு பயன்படுத்துவது?

'அ' தொடங்கி 'ஔ' வரையிலான உயிர் எழுத்துகளில் தொடங்கும் சொற்களுக்கு முன்னர் "ஓர்" பயன்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு: ஓர் ஆப்பிள், ஓர் ஆயிரம், ஓர் உலகம், ஓர் அணில், ஓர் ஆடை, ஓர் இலை.



கீழ்க்காணும் வாக்கியங்களில் எங்கு ஓர் / ஒரு வரவேண்டும் எனக் கண்டுபிடிப்போமா?

1. ----- முயலும் ----- ஆமையும் போட்டியிட்டன.
2. --- எறும்புக்கு --- புறா உதவியது.

உயிர்மெய் எழுத்துகளில் தொடங்கும் சொற்களின் முன்னால் "ஒரு" பயன்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு: ஒரு மரம், ஒரு பொருள், ஒரு பலகை, ஒரு கை, ஒரு கால், ஒரு கிராமம், ஒரு நகரம், ஒரு விலங்கு.

அது ஓர் அழகிய சிற்றூர்.

அவர் ஓர் ஓவியர்.

இவை சரியா?

'அது ஓர் அழகிய சிற்றூர்' என்பது சரி. 'அவர் ஓர் ஓவியர்' என்பது பிழை. அஃறிணையில் மட்டும்தான் ஓர், ஒரு என்பதைப் பயன்படுத்த வேண்டும். உயர்திணைச் சொற்களுக்கு இது பொருந்தாது. ஓர் ஓவியர், ஓர் இளைஞர், ஒரு மாணவர், ஒரு மனிதன் என்று எழுதக் கூடாது.

ஓவியர் ஒருவர், இளைஞர் ஒருவர், மாணவர் ஒருவர், மனிதன் ஒருவன் எனப் பயன்படுத்த வேண்டும்.


பிழையான வார்த்தைகளும் திருத்தப்பட்ட வார்த்தைகளும்

| பிழை | திருத்தம் |
|---|---|
| நல்வாழ்கை | நல்வாழ்க்கை |
| கற்ப்பகம் | கற்பகம் |
| பற்ப்பல | பற்பல |
| பயிற்ச்சி | பயிற்சி |
| மெய்பொருள் | மெய்ப்பொருள் |
| முயற்ச்சி | முயற்சி |

ஓர், ஒரு பகுதிக்கு விடை:

ஒரு முயலும் ஓர் ஆமையும் போட்டியிட்டன.

ஓர் எறும்புக்கு ஒரு புறா உதவியது.




## கீழே உள்ள சொற்களில் எது சரியானது... எது பிழையானது எனக் கண்டுபிடிப்போமா?

- காய்க்கும்
- நல்வாழ்கை
- காழ்ப்புணர்ச்சி
- கற்ப்பகம்
- பற்ப்பல
- தண்ணீர்க்குடம்
- மெய்பொருள்
- பயிற்ச்சி
- முயற்ச்சி
- அயர்ச்சி



Illustrated by Yuvaka Sreedha

## அடுத்தடுத்த மெய்யெழுத்துகள் சரியா?

க் ச் த் ப்

க் முதல் ன் வரையிலான மெய்யெழுத்துகள் ஒரு சொல்லில் அடுத்தடுத்து வருமா?

நிச்சயம் வரும். வாழ்க்கை, நிகழ்ச்சி, நெகிழ்ச்சி, புகழ்ச்சி, வீழ்ச்சி, தமிழ்த்தாய், வாய்க்கால், சாய்ந்தான், ஆய்ந்தான், மாய்ந்தான், காய்ச்சல் உள்ளிட்ட சொற்களில் அடுத்தடுத்து மெய்யெழுத்துகள் வந்துள்ளன.

ஆனால், சிலர் கற்ப்பித்தான், நற்ப்பணி, அதற்க்கு என்று எழுதுகிறார்கள். அது பிழை.

18 மெய்யெழுத்துகளில் **ய், ர், ழ்** ஆகிய மூன்று மெய்யெழுத்துகளின் பின் இன்னொரு மெய்யெழுத்து வரும். மற்ற எழுத்துகளுக்கு அடுத்து வராது.

கற்பித்தான், நற்பணி, அதற்கு என்றே எழுத வேண்டும்.

- நா.இசை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





# அனகிராம் (Anagram)

அனகிராம் என்பது ஒரு சொல்லின் எழுத்துகளைப் பயன்படுத்தி மற்றொரு சொல்லை உருவாக்குவதாகும்.

எடுத்துக்காட்டு:

stop என்பதை pots என மாற்றலாம்.

sale என்பதை seal என மாற்றலாம்.

கீழ்க்காணும் சொற்களின் எழுத்துகளைப் பயன்படுத்தி வேறு சொற்களை உருவாக்கவும்.

1. now = -----------
2. opt = -----------
3. inks = -----------
4. demo = -----------
5. does = -----------
6. angel = -----------
7. heros = -----------
8. below = -----------
9. claps = -----------
10. ate = -----------

விடைகள்:

1. Own, 2. Pot, 3. sink, 4. mode, 5. dose, 6. angle, 7. horse, 8. elbow, 9. scalp, 10. eat

# ஆன்டிகிராம் [ANTIGRAM]

ஒரு சொல்லின் எழுத்துகளைப் பயன்படுத்தி மற்றொரு சொல்லை உருவாக்கும்போது, அசல் சொல்லுக்கு நேர்மாறாகப் பொருள் தருவது ஆன்டிகிராம் (Antigram) ஆகும்.

குறிப்பு:

1. புதிய சொல்லானது அசல் சொல்லின் அதே எழுத்துகளைக் கொண்டிருக்கும், ஆனால் வேறு வரிசையில் இருக்கும்.
2. அசல் வார்த்தைக்கு நேர்மாறாகப் பொருள் தரும்.

எடுத்துக்காட்டு:

gets a lot [நிறைய கிடைக்கும்] இதற்கான ஆண்டிகிராம் got least [குறைவாகக் கிடைத்தது]

கீழ்க்காணும் சொற்களின் எழுத்துகளைப் பயன்படுத்தி, அதற்கான ஆன்டிகிராமைக் கண்டுபிடிக்கவும்.

1. silent = -----------
2. sainted = -----------
3. diplomacy = -----------
4. dormitory = -----------
5. infection = -----------



விடைகள்:

1. listen, 2. stained, 3. mad policy, 4. dirty room, 5. fine tonic

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பாபுவும் சிட்டுக்குருவியும்!

**பாட்டிக்குச் சரியாகக் கண் பார்வை தெரியாது. அவர் கண்ணாடி அணியாமல் எங்கும் செல்ல மாட்டார்.**

ஒருநாள் பாபு, பாட்டியிடம் பணம் கேட்டான்: "பாட்டி, ஐஸ்கிரீம் வாங்க எனக்குப் பணம் கொடுங்கள்!"

"என்னிடம் பணம் இல்லை. உன் தாத்தா வந்ததும் கேட்டு வாங்கித் தருகிறேன்" என்றார் பாட்டி.

பாபுவுக்குக் கோபம் வந்தது. அவன் பாட்டியின் கண்ணாடியை எடுத்து ஒளித்து வைத்தான்.

கண்ணாடி இல்லாமல் பாட்டி தட்டுத் தடுமாறி நடந்தார்.

அப்போது சன்னலில் வந்து அமர்ந்த சிட்டுக்குருவி பாபுவிடம் சொன்னது:

"பாபு, கண்ணாடி அணியாமல் நடந்தால் பாட்டி விழுந்துவிடுவார் என்று உனக்குத் தெரியாதா? நீ செய்தது தவறு."

கண்ணாடி இல்லாமல் நடந்தால் பாட்டி தடுமாறி விழுந்துவிடுவார் என்று அப்போதுதான் நினைத்துப் பார்த்தான் பாபு.

உடனே பாட்டியின் கண்ணாடியை எடுத்து வந்து கொடுத்தான்.

மகிழ்ச்சியடைந்த பாட்டி அவனை அணைத்துக்கொண்டார்.

# Babu and the Sparrow

**Babu's grandma is partially blind. She never goes anywhere without spectacles.**

One day Babu asked his grandmother for money:

"Grandma, give me money to buy ice cream!"

"I do not have money. When your grandfather comes, I will give you after getting it from him," said grandmother.

Babu got angry. He took his grandmother's spectacles and hid them.

Grandmother hobbled without spectacles.

Then the sparrow sitting on the windowsill said to Babu:

"Babu, don't you know that if she walks without spectacles, your grandmother will fall? You did wrong."

Only then, Babu realised that grandma would stumble and fall if she walked without spectacles.

He immediately brought the grandmother's spectacles and gave them to her.

The grandmother became happy and hugged him.

Translated by, D. Meenakshi



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# முதல் ஜீன்ஸ் பேண்ட் எப்போது தைக்கப்பட்டது?



–கே.கீதப்பிரியா, 8ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, வியாசர்பாடி, சென்னை.

1873ஆம் ஆண்டு அமெரிக்கத் துணி விற்பனையாளரான லெவி ஸ்ட்ராஸ் (Levi Strauss), கலிபோர்னியாவுக்கு வந்தார். அங்கே உள்ள சுரங்கத் தொழிலாளர்களுக்கு, வேலை நேரத்தில் அணிந்துகொள்ள கெட்டியான துணியால் ஆன உடை தேவைப்பட்டது. அவர்களுக்காக லெவி ஸ்ட்ராஸ், கேன்வாஸால் கெட்டியான காற்சட்டை தயாரிக்க முயற்சி செய்தார். அப்போது, இத்தாலியில் ஜெனோவாவில் 'ஜீன்ஸ்' எனும் பெயரில் கடினமான ஒருவகைத் துணி இருப்பதைக் கேள்விப்பட்டு உடனே அதை வரவழைத்தார். ஜேக்கப் டேவிஸ் (Jacob W.Davis) எனும் தையல்காரரைக் கொண்டு முதலாவது ஜீன்ஸ் பேண்ட் தைத்தார். டேவிஸ் தைத்த ஜீன்ஸ் பேண்ட், 'லெவீஸ்' என்று அறியப்பட்டது. இது பிறகு 'லெவீஸ் நீல ஜீன்ஸ்' என்று புகழ் பெற்றது.



## 'கானகச் சுடர்' [Flame of the forest] என்று அழைக்கப்படும் மரம் எது?

–கு.சரண்யா, 7ஆம் வகுப்பு, அ.பெ.மே.நி. பள்ளி, சேலம்.

புரசு மரம்தான் இப்படி அழைக்கப்படுகிறது. இந்த மரத்தில் சிவப்புப் பூக்கள் நிறைந்திருப்பதைப் பார்த்தால், மரத்திற்குத் தீப்பிடித்துவிட்டதோ என்று தோன்றும். இதனால்தான் இந்த மரத்துக்கு 'கானகச் சுடர்' எனும் பெயர் வந்தது. பூ பூக்கும்போது இந்த மரத்தில் தேன் குடிக்கக் கிளிகள் கூட்டம் கூட்டமாக வரும். அதனால் இந்த மரத்தைக் 'கிளி மரம்' (Parrot tree) என்றும் அழைக்கிறார்கள்.

## ஒளியாண்டு [Light year] என்றால் என்ன?

–ரா.அகிலன், 7ஆம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, திருப்பத்தூர்.




ஒளியாண்டு என்பது கிரகங்கள், சூரியன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தூரத்தை அளப்பதற்கான ஒரு முறையாகும். ஒளிக் கதிர் ஒரு நொடியில் பயணிக்கும் தூரம், எண்பத்தாறாயிரம் மைல்! அப்படியென்றால், ஓராண்டில் ஒளி எவ்வளவு தூரம் செல்லும்? அந்தத் தூரம்தான் ஓர் ஒளியாண்டு. இந்தத் தூரத்தை எண்ணால் எழுதினால் இப்படி வரும், 6,000,000,000,000!

6 லட்சம் கோடி மைல் (Trillion Miles) இதை நினைவில் வைத்துக்கொள்வது சிரமமாக இருக்கும் அல்லவா, அதனால்தான் இதை ஓர் ஒளியாண்டு என்று சொல்கிறோம்.

சூரியனிலிருந்து வரும் ஒளி பூமிக்கு வருவதற்கு 8 நிமிடம் மட்டுமே ஆகும். ஆனால், சூரியனைத் தவிர, பக்கத்திலுள்ள நட்சத்திரத்திலிருந்து ஒளி பூமிக்கு வருவதற்கு நான்கு ஒளியாண்டுகள் தேவைப்படும்!



## சில நாடுகளை ஏன் 'நள்ளிரவுச் சூரியனின் நாடுகள்' என்று அழைக்கிறார்கள்?

–ஹரிணி, 9ஆம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, காஞ்சிபுரம்.

வடதுருவப் பகுதிகளில் கோடை நாட்களின் நீளம் மிகவும் அதிகமாக இருக்கும். நள்ளிரவில்கூட சூரியன் முழுதும் மறையாதிருக்கும். அப்போது இரவுகளில் சிறிதளவு வெளிச்சம் இருக்கும். இதைத்தான் நள்ளிரவுச் சூரியன் (Midnight Sun) என்று அழைக்கிறார்கள். ஏறத்தாழ ஆறு மாதம்வரை இங்கே நள்ளிரவுச் சூரியனைப் பார்க்க முடியும்.

நார்வே, பின்லாந்து, ஸ்வீடன், கிரீன்லாந்து, கனடா ஆகிய நாடுகளும் அலாஸ்கா மற்றும் ரஷ்யாவின் சில பகுதிகளும் நள்ளிரவுச் சூரியன் காணப்படும் நாடுகளாகும். அதனால் இந்தப் பிரதேசங்களை எல்லாம் நள்ளிரவுச் சூரியனின் நாடுகள் என்று அழைக்கிறார்கள்.

**கேளுங்கள்!** உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', **'தேன்சிட்டு' சிறார் இதழ்**

8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




https://kalvi-thagavalkalanjiyam.blogspot.com

# காகித மீன் செய்வோம்!


முதலில் படம்-1இல் இருப்பதுபோல, கெட்டியான காகிதத்தை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். வெட்டும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

1




இனி, படம்-2, 3இல் காண்பதுபோல உட்புறத்தில் இருக்கும் காகிதங்களைச் சேர்த்து வைத்து ஒட்டுங்கள். அப்புறம், மீனுக்குக் கண் வரையலாம்.


2



3



படம்-4இல் இருப்பதுபோல மீனில் சிறிய துளையிட்டு நூல் கட்டித் தொங்கவிடுங்கள். இதுபோல வேறு பல நிறங்களிலும் மீன்களை உருவாக்கி கட்டித் தொங்கவிடலாம்! பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.





4





## நுண்ணோக்கி (Microscope) செய்து பார்க்கலாம்!

1. முதலில் நெகிழிக் (Plastic) கோப்பையின் பக்கவாட்டில் சதுர வடிவில் துளை செய்யுங்கள்.
2. கோப்பையின் மேலே பாலித்தீன் பேப்பரை இரப்பர் பேண்டால் கட்டுங்கள். கொஞ்சம் தளர்வாகக் கட்ட வேண்டும்.
3. பாலித்தீன் பேப்பரின் மீது தண்ணீர் ஊற்றுங்கள். இப்போது இது ஒரு லென்ஸ் போல ஆகிவிட்டது.
4. கோப்பையின் சதுரத் துளை வழியே, எழுத்துகளையோ, படங்களையோ கோப்பைக்குள் காட்டுங்கள். கீழே நீங்கள் எதைக் காட்டுகிறீர்களோ, அது மேலே பாலித்தீன் பேப்பரில் பெரியதாகத் தெரியும்!










Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## எழுத்துகளுக்குள் ஒளிந்திருக்கும் விளையாட்டுகளின் பெயர்களைக் கண்டுபிடி




| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| T | U | E | H | P | M | P | B | Q | Q | N |
| V | S | C | B | D | M | T | A | S | R | S |
| O | O | R | A | F | E | L | S | S | R | I |
| L | L | I | D | F | G | L | K | Y | E | N |
| L | T | C | M | Y | E | A | E | R | C | N |
| E | Q | K | I | W | U | B | T | I | A | E |
| Y | Z | E | N | B | U | E | B | D | M | T |
| B | V | T | T | N | A | S | A | W | S | L |
| A | C | V | O | F | K | A | L | P | Z | H |
| L | Y | W | N | E | V | B | L | C | A | W |
| L | W | Z | Z | J | V | T | T | U | C | Q |







## எந்த எழுத்து?

கீழே கொடுத்துள்ள எண்களையும் எழுத்துகளையும் உற்று நோக்குங்கள். தர்க்கத்தின் அடிப்படையில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய எழுத்தைக் கண்டுபிடி

**2 = Y**

**3 = x**

**4 = w**

**எனில்,**

**9 = ?**

## இரு படங்களுக்கு இடையே உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடி!





விடைகள் 20ஆம் பக்கம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



# மாணவர் க



க. சுபாஷிகா, 7ஆம் வகுப்பு,
பா.ஆ.பொ.நா.அரசு மேல்நிலை பள்ளி, மாடியனூர், தென்காசி.



எஸ். முகிலன், 9ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலை பள்ளி, கண்டிகை, செங்கல்பட்டு



ச. கன்ஷிகா, 7ஆம் வகுப்பு,
பா.ஆ.பொ.அரசு மேல்நிலைப் பள்ளி,
மாடியனூர், தென்காசி



மு. நித்திஷ்,, 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, சாலிவாரம், கிருஷ்ணகிரி.



ப. சுஜிதா, 6ஆம் வகுப்பு, பி.ஏ.பி.என். அரசு மேல்நிலைப் பள்ளி,
ஆவுடையானூர், தென்காசி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# கலைவண்ணம்



ம் வகுப்பு,
செங்கல்பட்டு

ம் வகுப்பு,
லப் பள்ளி,
தென்காசி

## படைமாட்சி

குறள் : ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். -குறள் எண்: 763

பொருள் : எலியாகிய பகைக்கூடி கடல் போல் ஒலித்தாலும் என்ன தீங்கு ஏற்படும், பாம்பு மூச்சு விட்ட அளவில் அவைக் கெட்டழியும். - மு. வரதராசன் உரை



ச. யுவராணி, 7ஆம் வகுப்பு, ஊ.ந.நி. பள்ளி, சென்னேரி, செங்கல்பட்டு.



ப் பள்ளி,



சு. ஹரிபிரியா, 7ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, ஆவத்திவச்சினம் பாளையம், கோயமுத்தூர்.



வி. குஷ்மிதா, 8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, உமரிக்காடு, தூத்துக்குடி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




# ஓவியத்தில் கதை சொன்னவர்!



**கொரிய நாட்டில் பிறந்தவர் யாங்க்சோக் சோய் (Yangsook Choi). அவரின் அப்பாவும் அம்மாவும் வேலைக்குச் சென்று விடுவார்கள். ரொம்பவும் வறுமையான குடும்பம் அது. யாங்க்சோக் நன்கு படித்து நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள் அவரின் பெற்றோர். அதனால், அவர் பள்ளியிலும் வீட்டிலும் படித்துக்கொண்டே இருந்தார். நாள் முழுக்கப் படித்துக்கொண்டே இருப்பது அவருக்குச் சோர்வளித்தது. வீட்டில் தொலைக்காட்சி, வானொலி என பொழுதுபோக்குக் கருவிகள் எதுவும் இல்லை. அதனால், அவர் வீட்டின் அருகே உள்ள வீடுகளுக்குச் சென்றார். அங்கே தான் பார்த்தவற்றை அப்படியே தாளில் வரைந்தார். அந்த ஓவியங்களைப் பாராட்டக்கூட யாருமில்லை.**

கல்லூரிப் படிப்பை முடித்த யாங்க்சோக், உணவகம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். அந்த வேலை பிடிக்காமல், விமான நிலைய உதவியாளர் பணிக்கு மாறினார். அதிலும் நீடிக்காமல், பிளாஸ்டிக் நகங்களில் ஓவியம் வரையும் ஒரு நிறுவனத்தில் சேர்ந்தார். அந்த வேலைதான் அவருக்குப் பிடித்திருந்தது. அங்கே வேலை செய்பவர்களைப் பார்த்து அப்படியே ஓவியமாக வரைந்தார். சின்ன வயதில் அவர் வரைந்தது நினைவுக்கு வந்தது. இனிமேல் ஓவியம்தான் தன் வாழ்க்கை என்று முடிவெடுத்தார். வேலை செய்து சம்பாதித்த பணத்தை வைத்து அமெரிக்காவுக்குச் சென்று ஓவியம் படித்தார். அமெரிக்காவில் கொரிய மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்றார். அங்குள்ள குழந்தைகளுக்கு வரையக் கற்றுக் கொடுத்தார். ஓவியங்களை வைத்துக் கதைகள் சொன்னார்.

'தி சன் கேர்ள் அன்டு தி மூன் பாய்' (THE SUN GIRL AND THE MOON BOY) என்ற நூலை அப்போதுதான் எழுதினார். அது அங்குள்ள குழந்தைகளுக்குப் பிடித்துவிட்டது. தொடர்ந்து, 'நியூ கேட்' (New Cat), 'பிகைண்ட் தி மாஸ்க்' (BEHIND THE MASK) போன்ற பல சிறுவர் நூல்களை எழுதினார்.








கொரியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்து வரும் குழந்தைகளின் பெயர்கள் கிண்டல் செய்யப்படுவதைப் பார்த்தார். அதை வைத்து 2003ஆம் ஆண்டில் 'தி நேம் ஜார்' (The Name Jar) என்ற நூலை எழுதினார். அதுதான் பலரையும் யாங்க்சோக்கைக் கவனிக்க வைத்தது. தற்போதும் அவர் குழந்தைகளுக்காகத் தொடர்ந்து எழுதி வருகிறார்.

-சிந்தன்

# கலைக் களஞ்சியம் தொகுத்தவர்!

**நம் 'தேன்சிட்டு' இதழில் வெளியான 'மாம்பழ ஆசை' எனும் கதையைப் படித்திருப்பீர்கள். அந்தக் கதையை எழுதியவர் பெயர் நினைவில் இருக்கிறதா?**



பெரியசாமித் தூரன்

**பெரியசாமித் தூரன் என்பவரே அது. தமிழ்ச் சிறார் எழுத்தாளர்களில் முக்கியமான இடத்தைப் பிடித்தவர் பெரியசாமித் தூரன். சுருக்கமாக பெ.தூரன் என்றும் குறிப்பிடுவார்கள்.**

1908ஆம் ஆண்டில் பிறந்தவர் பெ.தூரன். ஆசிரியராக முழு அர்ப்பணிப்போடு பணியாற்றியவர். காந்தியக் கொள்கைகளில் ஆர்வம் கொண்டவர். ஒருமுறை காந்தி தமிழ்நாட்டுக்கு வந்தபோது அவர் பேசியதை மொழிபெயர்க்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

குழந்தைகளுக்காகப் பாடல்கள், கதைகள், அறிவியல் கதைகள், நாவல்கள் என 16 நூல்களை எழுதியுள்ளார். சிறுவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் அழகான மொழிநடையில் படைப்புகளைத் தருவதே இவரின் சிறப்பு. இவர் எழுதியவற்றில் 'மழலை அமுதம்', 'ஆனையும் பூனையும்', 'ஓலைக்கிளி', 'மஞ்சள் முட்டை', 'நிலாப் பாட்டி' ஆகியவை புகழ்பெற்றவை. 'சூரப்புலி', 'சங்ககிரிக் கோட்டையின் மர்மம்' போன்ற சுவாரஸ்யமான சிறார் சாகச நாவல்களையும் இவர் எழுதியுள்ளார். அவற்றை இப்போது படித்தாலும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தருபவையாக உள்ளன.




பெரியசாமித் தூரன், மாபெரும் தமிழறிஞர் என்பதால் இவரின் கதைகள், பாடல்கள் வழியே பழந்தமிழ் சொற்களையும் அறிந்துகொள்ள முடியும். தமிழ் கலைக் களஞ்சியத்தைத் தொகுத்து அளித்தவர்; தமிழிசைப் பாடல்களை இயற்றியவர் எனும் பல்வேறு பெருமைகளுக்கு உரியவர் பெ.தூரன்.

-சரண்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in










# கோயம்புத்தூர் மாவட்டம்

**முன்னொரு காலத்தில் கோயம்புத்தூரை, 'கோவன்' எனும் தமிழ் இனத் தலைவர் ஒருவர் ஆண்டதாகக் கருதப்படுகிறது. அவர் பெயரால் இந்தப் பகுதி 'கோவன்புத்தூர்' என்று அழைக்கப்பட்டதாகவும், ஆங்கிலேயர்கள் இந்த ஊருக்குக் 'கோயம்புத்தூர்' என்று பெயர் சூட்டியதாகவும் சொல்லப்படுகிறது.**

கோயம்புத்தூரின் வரலாறு சங்க காலத்தில் தொடங்குகிறது. 'கொங்கு நாடு' என்று அழைக்கப்பட்ட இப்பகுதியில் பழங்குடிகள் நிறைந்திருந்தனர். குறிப்பாக, 'கோசர்கள்' எனப்படும் இனக்குழுவினர் அதிக அளவில் இங்கு வாழ்ந்தனர். தொடக்கத்தில் கோயம்புத்தூர் பகுதி சங்க காலக் குறுநில மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. பிறகு முறையே சேர - சோழ - பாண்டியர்கள், ராஷ்ட்ரகூடர்கள், சாளுக்கியர்கள், ஹோய்சாளர்கள், மதுரை நாயக்க மன்னர்கள், திப்புசுல்தான் ஆகியோர் ஆண்டனர்.

திப்புசுல்தானுக்குப் பிறகு கொங்கு நிலப் பரப்பு ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராகப் போராடிய தீரன் சின்னமலை (1756 - 1805) இப்பகுதியை மையமாகக் கொண்டு செயல்பட்டார்.

1804ஆம் ஆண்டில் கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே மாவட்டமாக ஆக்கப்பட்டது. ஹெச். எஸ். க்ரீம் என்பவர் அதன் ஆட்சியராக இருந்தார்.

பிறகு 1868-இல் நிர்வாக வசதிகளுக்காக இம்மாவட்டத்தின் சில பகுதிகள் தனியே பிரிக்கப்பட்டு நீலகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. இன்றும் இயங்கிவரும் சி.எஸ்.ஐ. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 1831-ஆம் ஆண்டு கோவையில் செயல்படத் தொடங்கியது. போத்தனூர் புகைவண்டி நிலையம் (1862), கோயம்புத்தூர் சிறைச்சாலை (1872) ஆகியவற்றை அமைத்த வெள்ளையர்கள் 1866இல் கோயம்புத்தூர் நகராட்சியை ஏற்படுத்தினர். இன்று கோயம்புத்தூர் மாநகர் மன்றம் அமைந்துள்ள விக்டோரியா டவுன் ஹால் கட்டடம் 1892-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

கடும் உழைப்பாளிகளான இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருந்தனர். பருத்தி நூல் உற்பத்திக்குத் தேவையான காலநிலை இங்கு நிலவியதால் நூற்பாலைகள் உருவாகின.

அதன்பின் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிலும் கோவை மாவட்டத்தில் சூடுபிடித்தது. இணையற்ற கண்டுபிடிப்பாளரான ஜி.டி.நாயுடு உருவாக்கிய தொழில் நிறுவனங்கள் கோவையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.

சிறுவாணி, வைதேகி அருவிகள், ஆனைமலை புலிகள் சரணாலயம் போன்று இயற்கை எழில்கொஞ்சும் இடங்களுக்கு இம்மாவட்டத்தில் பஞ்சமேயில்லை. ஆழியாறு அணை, சோலையாறு அணை, தூணக்கடவு அணை, நீராறு அணை, மேல்ஆழியாறு அணை ஆகியவை இந்த மாவட்டத்தைச் செழிக்கச் செய்கின்றன.




கல்விக்கூடங்களில் தமிழைப் பயிற்றுமொழியாக்கிய மேனாள் கல்வி அமைச்சர் டி.எஸ். அவினாசிலிங்கம், இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் ஆர்.கே. சண்முகம், பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்களை உருவாக்கிய ஜி.ஆர்.தாமோதரன், மாதவிடாய் துணிகள் உருவாக்கத்தில் பெரும் மாற்றத்தை உருவாக்கிய தொழிலதிபர் அருணாச்சலம் முருகானந்தம், எழுத்தாளர் அம்பை (சி.எஸ். லக்ஷ்மி), காட்டுயிர் நலனுக்காகப் போராடிவரும் ச. முகம்மது அலி, சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர் யோகநாதன் ஆகியோர் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சில குறிப்பிடத்தகுந்த ஆளுமைகளாவர்.

இயற்கை எழிலும், மனித உழைப்பும் ஒன்றிணைந்து உருவாக்கிய ஒரு நிலப்பரப்பாக கோயம்புத்தூர் மாவட்டம் இன்று திகழ்கிறது.

– சரவணன் பார்த்தசாரதி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





# யானை அல்ல!

**நீங்கள் அட்டையில் பார்த்தது யானையின் முன்னோடி 'மாமூத்'.**




**மாமூத் என்பது பூமியில் சுமார் 48 லட்ச ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினம் ஆகும். உருவத்தில் யானையைப் போன்றே இருக்கும். இது எலபென்டியா என்ற உயிரியல் குடும்பத்தைச் சேர்ந்தது. மாமூத்துகளிலிருந்துதான் பரிணாம வளர்ச்சி பெற்று, நாம் இப்போது காணும் யானைகள் உருவாயின.**

- ஆசியா, வட அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் மாமூத் வாழ்ந்ததாக தரவுகள் கிடைத்துள்ளன. மாமூத்களை தமிழில் கம்பளி யானைகள் என குறிப்பிடுகின்றனர்.
- தற்போது உள்ள யானைகளுடன் ஒப்பிடும் போது மாமூத் மிகவும் பெரிய உருவம் கொண்டதாகும். மாமூத் (Mammoth) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பெரியது எனப் பொருள்.
- மாமூத் முதல் படிமம் 1799 ஆம் ஆண்டு சைபீரியா ஆற்றங்கரையில் கண்டெடுக்கப்பட்டது.
- தொடர்ந்து, 1999 ஆண்டு 23 ஆயிரம் கிலோ கிராம் எடையுள்ள ஊல்லி என்னும் மாமூத்தின் உடலும் சைபீரியாவில் பனிக்கு அடியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.
- படிமங்களில் கிடைக்கப்பெற்ற ஊல்லி மாமூத்களின் உடலமைப்பு ஆப்பிரிக்க யானைகளுடன் ஒத்துப்போவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- உலக அளவில் ரஷ்யாவில்தான் அதிக அளவில் மாமூத் படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த ஆதிகால மனிதர்கள் வாழ்ந்த குகைகளில் மாமூத்களின் ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளது.
- மாமூத்களை போர்வை போல போர்த்தி இருக்கும் ரோமங்கள் 3 அடி நீளமுடையவை. அந்த ரோமப் போர்வையால்தான் அவை கடும் குளிரையும் தாங்கி உள்ளன.
- இதுவரை உலகில் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மாமூத்தின் படிமங்களில் இருந்து அவை ஆறு முதல் பன்னிரெண்டு டன் எடை கொண்டதாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- மாமூத்கள் 10 முதல் 12 அடி வரை வளரக்கூடியதாகவும் இருந்துள்ளன.


யானை

- பனிப்பிரதேசமான அலாஸ்காவில் மாமூத் வாழ்ந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.
- மாமூத்களின் தந்தங்களில் உள்ள வேதி பொருட்களை ஆய்வு செயது அவை அதன் வாழ்நாளில் 70 ஆயிரம் கி,மீ நடந்தன என்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.
- யானைகளைப் போலவே மாமூத்களும் தாவர உண்ணிகளாகவே இருந்துள்ளன.
- யானைகளைப் போலவே மாமூத்களும் கூட்டமாக குடும்பத்துடன் வாழும் இயல்புடையனவாக இருந்துள்ளன.
- பனியூகத்துக்கு பின் உண்டான காலநிலை மாற்றம், மனிதர்கள் உணவுக்காக வேட்டையாடுதல், தாவர உணவு பற்றாக்குறை போன்ற காரணமாக மாமூத் உயிரினம் அழிந்து இருக்கலாம் என கருதப்படுகிறது.
- ஆதிகால மனிதர்கள் கருவிகள் மற்றும் தங்குமிடம் வடிவமைக்க மாமூத்களின் தோல், தந்தம் ஆகியவற்றை உபயோகப்படுத்தியுள்ளனர்.
- தென்மேற்கு ஜெர்மனியில் மாமூத்தின் தந்தம் கொண்டு செய்யப்பட்ட புல்லாங்குழல் கிடைத்துள்ளது.
- பனிக்கட்டியில் இருந்து எடுக்கப்பட்ட்ட படிமங்களில், பல ஆண்டுகளுக்கு முன் இறந்து போன மாமூத்தின் தாடைப்பகுதியில் உள்ள இரத்தக்குழாய் கெடாத நிலையில் கிடைத்துள்ளது.
- படிமங்களில் இருந்து பெறப்பட்ட உறுப்புகளில் இருந்து எடுக்கப்பட்ட டி. என்.ஏவைக் கொண்டு மாமூத்களை மீண்டும் அவற்றை உருவாக்க முடியுமா என பல விஞ்ஞானிகள் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

– சுகு

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# உலக மரபுச் சின்னங்கள்

உலகிலுள்ள ஒவ்வோர் இடத்தின் மரபையும் அதன் வரலாற்றையும் பரிசீலித்து, அது பாதுகாக்கப்படவேண்டிய இடம் என்று யுனெஸ்கோ அறிவிக்கிறது. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்புதான் யுனெஸ்கோ (UNESCO – United Nations Educational, Scientific and Cultural Organization).

167 நாடுகளில் 1,154 நினைவுச் சின்னங்களை, உலக மரபுச் சின்னங்களாக அறிவித்திருக்கிறது. இதில், காடு, மலை, ஏரி, பாலைவனம், நினைவுச் சின்னங்கள், கட்டடங்கள், நகரங்கள் முதலியவையெல்லாம் மரபுச் சின்னங்களாகப் பரிசீலிக்கப்படுகிறது.

இந்தியாவில் மரபுச் சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றிருப்பவை மொத்தம் 40. தமிழகத்தில் தஞ்சை 'பெரிய கோயில்', தாராசுரம் 'ஐராவதீஸ்வரர் கோயில்', கங்கைகொண்ட சோழபுரம் 'பிரகதீஸ்வரர் கோயில்', 'மகாபலிபுரம் கோயில்', நீலகிரி 'மலை ரயில் பாதை' ஆகியவை உலக மரபுச் சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன. வேறு மாநிலங்களில் உள்ள மரபுச் சின்னங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.





## ராணியின் படிக் கிணறு [The Queen's Stepwell]

பூமிக்குள் கட்டப்பட்ட அரண்மனை போன்று இருக்கிறது இந்தப் படிக் கிணறு. இதைக் கட்டடக் கலையின் அதிசயமாக யுனெஸ்கோ கருதுகிறது. குஜராத்தில் சரஸ்வதி நதிக்கரையில் இருக்கிறது ஏழு தளங்கள் கொண்ட இந்தக் கிணறு. சோலங்கி ராஜ பரம்பரையைத் தோற்றுவித்தவர் முதலாம் பீம்தேவ். இவர் மனைவி உதயமதி, தன் கணவரின் நினைவாக இந்த அற்புதமான கிணற்றைக் கட்டுவித்தார். சமீபத்தில் வெளியிடப்பட்ட 100 ரூபாய் நோட்டில் இந்தக் கிணற்றின் படம் வெளியிடப்பட்டுள்ளது.

## அஜந்தா மற்றும் எல்லோரா குகைகள் [Ajanta and Ellora Caves]

உலக மரபுச் சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்ற இந்தியாவின் முதலாவது நினைவுச் சின்னங்கள்தான் அஜந்தா – எல்லோரா குகைகள். மகாராஷ்டிராவின் சுற்றுலாதலம் என்று அறியப்படும் ஔரங்கபாதில் இவை இருக்கின்றன. அஜந்தாவில் 30 குகைகளும், எல்லோராவில் 34 குகைகளும் உள்ளன. இந்தக் குகைகளில் மிக அழகான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. புத்தத் துறவிகள் தங்குவதற்காகவும் பிரார்த்தனை செய்வதற்காகவும் இரண்டு விதமான குகைகள் அஜந்தாவில் உள்ளன. எல்லோரா குகைகளில் இந்து, ஜைன, புத்தக் கோயில்கள் உள்ளன.

## ஜந்தர் மந்தர் [Jantar Mantar]

இராஜஸ்தானில் ஜெய்ப்பூரில் இருக்கிறது ஜந்தர் மந்தர். காலண்டர்களும் வானியல் கணக்குகளும் செய்வதற்காக ஜெய்ப்பூர் இராஜா சவாய் ஜெய்சிங் (இரண்டாம் ஜெய்சிங்) 1724களில் உருவாக்கியது இது.


13 கட்டட அமைப்புகள் கொண்ட ஒரு தொகுப்பு இது. இவற்றை எந்திரங்கள் என்று அழைக்கிறார்கள். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றின் போக்கை ஆராய்வதற்கு இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். கடிகாரம் கண்டுபிடிப்பதற்கு முன்பு நேரம் அறிவதற்கும் இந்த எந்திரங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். உலகத்திலேயே மிகப் பெரிய வானியல் கடிகாரம் இங்குதான் உள்ளது. நட்சத்திரங்களின் காலத்தையும் இடத்தையும் அறிவதற்கு இது பயன்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





# ரோபோக்களோடு பேசும் சரண்யா


கதை, ஓவியங்கள்: தன்வி பாத் மொழிபெயர்ப்பு: வெற்றி





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





## ரோபோக்களுடன் பேசுவது எப்படி?

இயந்திர மனிதர்கள் என்னும் ரோபோக்களின் மூளை ஒரு கணினியாகும். கணினிகளோடு பேசவும் அவற்றுக்குப் பணிகள் இடவும், நமக்கு அவற்றின் மொழியில் பேசத் தெரிய வேண்டும்.

கணினிகளுக்குப் புரியும், கணினி நிரல் அடிப்படையிலான மொழிகளை Programming Languages என்று சொல்வோம். இயந்திரங்களோடு தொடர்புகொள்ள நிரல்கள் எழுதுபவரை நிரலாளர் (Programmer) என்போம். கணினிகளோடு பேசவும் அவற்றுக்கு வேலை சொல்லவும் பல நிரலாக்க மொழிகள் இருக்கின்றன. சி, சி++, ஜாவா என்பன அவற்றுள் சில. உங்களுக்கும் இயந்திர மனிதர்களுடன் பேச ஆசையாக இருக்கிறதா?



நன்றி: www.storyweaver.org.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# புதிய புத்தகங்கள்

## எலெக்ட்ரானிக்ஸ் இன்றியே விளையாடுவோம்

கதை: பஞ்சு மிட்டாய் பிரபு




கைப்பேசியை வைத்துக்கொண்டு விளையாடும் மகிழ் எனும் சிறுமி, தன் அப்பாவிடமிருந்து எளிமையான பல விளையாட்டுகளைத் தெரிந்து கொள்கிறாள். அவையெல்லாம் மின்னணுக் கருவிகள் எதுவும் இல்லாமல் மகிழ்ச்சியாக விளையாடக்கூடியவை. தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கான விளையாட்டுகள் பற்றி நல்லதொரு அறிமுகம் தரும் நூல்.

## மனிதகுல வரலாறு

கதை: நீதிமணி

மனித இனம் எப்படித் தோன்றியது என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆர்வம் எல்லோருக்கும் இருக்கும்தானே... குரங்கிலிருந்து தோன்றிய மனிதனின் பரிணாம வளர்ச்சியையும் நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டதையும் விவசாயம் உருவானது பற்றியும் பல சுவாரஸ்யமான வரலாற்றுத் தகவல்களைக் கதையாகச் சொல்கிறது இந்த நூல். நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ள அவசியம் படிக்க வேண்டிய நூல் இது.




## கல்வியும் பள்ளிகளும்

எழுத்து: கோ. பழனி




உலகம் எப்படி உருவானது, மனிதர்கள் எப்படி உருவானார்கள் என்பதை எல்லாம் கல்வியின் வழியே படிக்கிறோம். அந்தக் கல்வி எப்போது தொடங்கியது, எந்தெந்த நூற்றாண்டுகளில் எப்படிக் கல்வி அளிக்கப்பட்டன என்பது குறித்த செய்திகளைத் தருகிறது இந்தப் புத்தகம். வேதக் கல்வி முதல் ஆங்கிலேயர் கல்விமுறை வரையிலான இந்தியாவின் கல்வி முறையைப் பற்றித் தெரிந்துகொள்ள அவசியம் படிக்க வேண்டிய நூல்.

## இயற்கையின் நேயன் பாரி

கதை: வெற்றிச்செழியன்

கடையேழு வள்ளல்களில் ஒருவர் பாரி. முல்லைக்கொடி படர்வதற்கு, தவித்தபோது, தன் தேரையே அளித்த மாமன்னர். அவரின் வாழ்க்கையை அருமையான கவிதை நடையில் படிக்க விரும்புபவர்களுக்கு இந்தப் புத்தகம் நிச்சயம் பிடிக்கும். அழகான ஓவியங்கள் நூலை இரசித்துப் படிக்கும் விதமாக மாற்றிவிட்டது.




மேற்கண்ட நான்கு நூல்களையும் வெளியிட்டது: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
எண்: 68, ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

## 11ஆம் பக்க விடைகள்:

ஆறு வித்தியாசங்கள்



எந்த எழுத்து

9 = R

ஒளிந்திருக்கும் விளையாட்டுக்கள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| T | U | E | H | P | M | P | B | Q | Q | N |
| V | S | C | B | D | M | T | A | S | R | S |
| O | O | R | A | F | E | L | S | S | R | I |
| L | L | I | D | F | G | L | K | Y | E | N |
| L | T | C | M | Y | E | A | E | R | C | N |
| E | Q | K | I | W | U | B | T | I | A | E |
| Y | Z | E | N | B | U | E | B | D | M | T |
| B | V | T | T | N | A | S | A | W | S | L |
| A | C | V | O | F | K | A | L | P | Z | H |
| L | Y | W | N | E | V | B | L | C | A | W |
| L | W | Z | Z | J | V | T | T | U | C | Q |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



# பாட்டு ஒப்பித்தால் பலகாரம்!

குறித்த நேரத்துக்கு முன்பாகவே ஒரு சிறுவன் வகுப்புக்கு வந்துவிட்டான். தான் எழுதிய பாட்டு ஒன்றை ஆசிரியரின் மேசையில் வைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டான். மணி அடித்தது. மாணவர்கள் வகுப்பில் வந்து உட்கார்ந்தார்கள். அந்தப் பையனும் மெதுவாக உள்ளே வந்து மாணவர்களுக்கு நடுவில் அமர்ந்து கொண்டான்.





கவிமணி
தேசிக விநாயகம்

தமிழாசிரியர் வகுப்புக்கு வந்தார். தன் மேசையில் இருந்த பாட்டை எடுத்துப் படித்துப் பார்த்தார். அது அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது.

“இந்த நல்ல பாட்டை எழுதியது யார்? பெயர் தெரியவில்லையே!” என்று கூறி, அந்தப் பாட்டை மாணவர்களுக்குப் படித்துக் காட்டினார். அதை எழுதிய பையனுக்கோ, பெரிய மகிழ்ச்சி. ஆசிரியரே அந்தப் பாட்டை இனிமையாகப் பாடினார். பெயர் தெரியாத அந்தக் கவிஞர் எழுதிய பாட்டின் சிறப்பைப் பாராட்டிப் பேசினார். அதை எழுதிய சிறுவன், ‘நான்தான் இந்தப் பாட்டை எழுதினேன்’ என்று கடைசிவரை சொல்லவே இல்லை.

அன்று அந்தப் பையன் தன் பெயரைச் சொல்லவில்லை. ஆனால், பிற்காலத்தில் அவன் பெயர் பெரும் புகழ் பெற்றுவிட்டது!

‘கவிமணி’ என்று அழைக்கப்படும் கவிமணி தேசிக விநாயகம்தான் அவர்!

சிறு வயதில் ஒரு குருவிடம் தமிழ் கற்று வந்தார் கவிமணி. ஒரு நாள் குரு தன் மாணவர்களிடம் சொன்னார்: “இதோ முறுக்கு, வடை, மிட்டாய்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. புத்தகத்திலிருந்து ஒரு பாட்டு மூன்று முறை உங்களுக்குப் படித்துக் காட்டப்படும். பிறகு நீங்கள் அந்தப் பாட்டைத் தவறு இல்லாமல் மனப்பாடமாக ஒப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யும் பையனுக்குப் பலகாரம் கிடைக்கும்!”

பல பாடல்கள் படித்துக் காட்டப்பட்டன. பெரும்பாலான பாடல்களை கவிமணி அப்படியே ஒப்பித்தார். பலகாரங்களில் முக்கால் பங்கு கவிமணியிடம் குவிந்து விட்டன.

கவிமணியின் ஒப்பிக்கும் திறமையை அனைவரும் பாராட்டினார்கள். கவிமணி தன்னிடம் இருந்த பலகாரங்களை அத்தனை பேருக்கும் பகிர்ந்து கொடுத்தார். அவர்களுடன் சேர்ந்து அவரும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டார்.

– செபஸ்டின் ராஜ்



ஓவியங்கள் : பா. செந்தில்குமார்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# வலிமை தரும் வாழைப்பழம்!

'வாழைப் பழத் தோல் வழுக்கிப் புலவர் கீழே விழுந்தார்' மொழிப் பயிற்சிக்காக இம்மாதிரியான வாக்கியங்களை வேகமாகக் கூற வைப்பார்கள். பேச்சை மட்டுமல்ல; உடலையும் சீராக்கும் வலிமை வாழைப்பழத்துக்கு உண்டு. அது பற்றிப் பார்ப்போம்.



- வாழைப்பழத்தின் பூர்வீகம் இந்தியா என்பதே பலரின் கருத்து. ஆனால், பசிபிக் பெருங்கடல் பகுதியில் உள்ள பப்புவா நியூ கினியா (Papua New Guinea) தீவு என்று சொல்பவர்களும் உண்டு. அரசர் அலெக்ஸாண்டர் படைகள் இந்தியாவுக்குள் வந்தபோது வாழைப்பழத்தை விரும்பி உண்டதாகவும் கூறப்படுகிறது.
- இந்தியாவிலிருந்து அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகளுக்கு என, உலகம் முழுவதும் வாழைப்பழம் பரவியிருக்கிறது.
- வாழைப்பழத்தில் 75 சதவிகிதம் தண்ணீர் உள்ளது.
- பூவன், கற்பூரவள்ளி, மொந்தன், ஏலரிசி, மலை, பேயன், ரஸ்தாளி, பச்சை, நவரை, சர்க்கரை, செவ்வாழை, நாட்டு வாழைப்பழம் உள்ளிட்ட பல வகைகள் உள்ளன.
- 135க்கும் அதிகமான நாடுகளில் வாழைப்பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வாழைப்பழத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வகைகள் இருப்பதாகத் தெரிவிக்கிறது. இந்தியாவில் மட்டும் 25க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.
- உலகளவில் விளைவிக்கப்படும் வாழைப்பழங்களில் 25 சதவிகிதம் இந்தியாவில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.
- இந்தியாவில் ஆந்திரப்பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் வாழைப்பழ உற்பத்தி அதிகளவில் நடைபெறுகிறது.

## 100 கி. வாழைப்பழத்தில் உள்ள சத்துகள்

| | | |
|---|---|---|
| கலோரி (Calories) | - | 89 Kcal |
| கொழுப்பு (Fat) | - | 0.3 g |
| சோடியம் (Sodium) | - | 1 mg |
| மாவுச்சத்து (Carbohydrates) | - | 23g |
| நார்ச்சத்து (Fiber) | - | 2.6 g |
| புரதம் (Protein) | - | 1.1 g |
| இனிப்பு (Sugar) | - | 12 g |
| கால்சியம் (Calcium) | - | 5 mg |
| பொட்டாசியம் (Potassium) | - | 358 mg |
| பாஸ்பரஸ் (Phosphorus) | - | 22 mg |
| மெக்னீசியம் (Magnesium) | - | 27 mg |
| இரும்புச்சத்து (Iron) | - | 0.26 mg |
| துத்தநாகம் (Zinc) | - | 0.15 mg |

இன்னும் பல...



- இந்தியாவிலிருந்து 2020-21ஆம் ஆண்டில் **616 கோடி** ரூபாய்க்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. எடை அளவில் பார்த்தால் **19 கோடியே 32 லட்சம் கிலோகிராம்.**
- இந்தியாவிலிருந்து ஈரான், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரபியா உள்ளிட்ட நாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி அதிகளவில் செய்யப்பட்டுள்ளது.

## வாழை என்றால் நலம்


- உடலில் நீர்ச்சத்து குறைந்துள்ளபோது வாழைப்பழம் சாப்பிட்டால், அது இயற்கையான குளுக்கோஸாக மாறி உதவுகிறது.
- உடலில் தேங்கியிருக்கும் தேவையற்ற சோடியம் உப்பை நீக்கிவிடும்.
- மலச்சிக்கல் இருந்தால் சரிசெய்யும் மருந்தைப்போல செயல்படுகிறது வாழைப்பழம்.
- சிறுநீர் வழியாகக் கால்சியம் அதிகளவில் வெளியேறுவதைத் தடுத்து, எலும்புகளின் உறுதியைக் காக்கிறது.
- வயிற்றில் நல்ல பாக்டீரியாக்கள் வளர உதவுகிறது வாழைப்பழம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






**அரசுப் பள்ளியில் பயிலும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்குக் கிடைக்கும் உதவிகள் :**

- குறைபாடுகளைக் கண்டறிவது,
- குறைபாடுகளுக்கு ஏற்ற மருத்துவ வசதி வழங்குவது,
- தேர்வு எழுத உதவுவது.

பள்ளி ஆயத்தப் பயிற்சி மையம் வாயிலாக உதவிகளை வழங்கி அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி வருகிறது 'அனைவருக்குமான கல்வி' திட்டம்!






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



Then Chittu Fortnightly Registered with RNI No: TNTAM/2022/82345.
Postal Registration No: TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No: TN/PMG(CCR)/WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 01-05 July 2023 Posted at Egmore, RMS/ Patrika Channel
இதழ் 15

# ஜூலை மாதம் பிறந்த நாள் சிறப்பு தினங்கள்

## 01



### தேசிய மருத்துவர்கள் தினம்

லண்டனில் இந்தியருக்கு மருத்துவப் படிப்பு மறுக்கப்பட்ட காலத்தில், தொடர்ந்து போராடி மருத்துவம் பயின்றவர் பிதான் சந்திர ராய். அதன்பிறகு இந்தியாவுக்கு வந்து மருத்துவப் பணி செய்தார். அவரைப் போற்றும் விதமாக 1991ஆம் ஆண்டு முதல் அவர் பிறந்த நாளான ஜூலை 1ஆம் தேதியை இந்திய அரசு தேசிய மருத்துவர்கள் தினமாக அறிவித்தது.

## 02



### உலகப் பறக்கும் தட்டு தினம்

விண்ணில் பறக்கும் அடையாளம் தெரியாத பொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகப் பறக்கும் தட்டு தினம் கொண்டாடப்படுகிறது. அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்கள் தினத்துக்கான அமைப்பு (World UFO Day Organisation) ஜூலை 2ஆம் தேதியை உலகப் பறக்கும் தட்டு தினமாக அறிவித்தது. அதற்குக் காரணம் அமெரிக்காவில் அதே தேதியில் பறக்கும் தட்டால் ஒரு விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

## 03



### சர்வதேச பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம்

பிளாஸ்டிக் பையால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கம். கழிவில்லா ஐரோப்பா என்ற அமைப்பினரால் 2008ஆம் ஆண்டு முதன்முதலாக இத்தினம் அனுசரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் பிளாஸ்டிக் பை ஒழிப்புக்கான வெவ்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

## 12



### மலாலா யூசப்சாய்:

பிறந்த நாள்

பெண் கல்வியின் அவசியத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருபவர் மலாலா. பெண்கள் கல்வி கற்க இருந்த தடையை மீறி கல்வி கற்கச் சென்றதால் தாக்கப்பட்டார். அதிலிருந்து மீண்டு வந்து பலருக்கும் உதாரணமாகத் திகழ்கிறார். 2014ஆம் ஆண்டு இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஐ.நா. சபை இவரது பிறந்தநாளை 'மலாலா தினம்' என அறிவித்துள்ளது.

## 05



### பி.வி. சிந்து:

பிறந்த நாள்

உலகளவில் புகழ்பெற்ற இறகுப் பந்தாட்ட (Badminton) வீராங்கனை பி.வி. சிந்து. ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பாக விளையாடி ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு வெண்கலப் பதக்கமும் பெற்றுத் தந்துள்ளார். விளையாட்டுத் துறைக்கான கேல் ரத்னா விருது மற்றும் பத்மஸ்ரீ, பத்ம பூஷண் விருதுகளையும் பெற்றவர்.

## 07



### எம்.எஸ். தோனி:

பிறந்த நாள்

இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி. கபில் தேவுக்குப் பிறகு இந்தியாவுக்கு ஒருநாள் போட்டியில் உலகக் கோப்பையைப் பெற்றுத் தந்தவர். ஒருநாள் உலகக் கோப்பை, ஆண்கள் T20 கிரிக்கெட் உலகக் கோப்பை, ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை என மூன்று பிரிவுகளிலும் கோப்பையை வென்ற ஒரே கேப்டன் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர்.

## 15



### காமராசர்:

பிறந்த நாள்

கல்விக் கண் திறந்தவர் என்று தமிழ்நாட்டு மக்களால் அழைக்கப்படுபவர் முன்னாள் முதலமைச்சர் காமராசர். குழந்தைகள் பசியின்றி படிக்க மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இலவசச் சீருடை, பள்ளிச் சீரமைப்பு இயக்கம் எனப் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்தார்.

உங்களுக்கு **தேன்சிட்டு** இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்

முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு,
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com